# கடைசிகால செய்தியில் பழமொழிகள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# கடைசிகால செய்தியில் பழமொழிகள்

❶

## தேவனைக் கனவீனப்படுத்தும் பழமொழி

ஒரு பழமொழி உண்டு - “தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்பவர்க்கு தேவன் உதவி செய்கிறார்” என்னும் தேவனைக் கனவீனப்படுத்தும் பழமொழி.

அது தேவனைக் கனவீனப்படுத்துவதாகும்.

தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியாதவர்களுக்கே தேவன் உதவி செய்கிறார்.

இரக்கம் தேவைப்படுகிறவர்களுக்கு அவர் தேவனாயிருக்கிறார்.

அவர் இரக்கமுள்ள தேவன்.

அந்த பழமொழி அவ்வாறு கூறுகின் றதே, உங்களுக்கு நீங்களே உதவி செய்துகொள்ள முடியுமானால், உங்க ளுக்கு தேவனுடைய உதவி அவசிய மில்லையே!

தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியாதவர்களுக்கு அவர் உதவி செய்கிறார்.

செய்தி: **60-03-10 எலியாவும் போஜனபலியும்**

~ ~ ~ ~ ~

## ❷

## தேவ தூதர் நடக்கப் பயப்படும் பாதையில் மூடர்கள் ஆணியடிக்கப்பட்ட காலணிகளைப் போட்டுக் கொண்டு நடக்கின்றனர்

30. சிலர் நின்று கொண்டு இதைப் பார்த்து கேலி செய்கின்றனர், சிலர் இதைப் பார்த்து சிரிக்கின்றனர், சிலர் இதை மூடமதாபிமானம் என்றழைக்கின்றனர், சிலர் இதை மனோதத்துவத்தினால் மனிதரின் சிந்தனைகளை வெளிப்படுத்துதல் (mental telepathy) என்கின்றனர், சிலர் இதை பெயல்செபூல் என்றழைக்கின்றனர், சிலர் இதை ஏதோ ஒரு பெயரால் அழைக்கின்றனர்.

''தேவ தூதர் நடக்கப் பயப்படும் பாதையில் மூடர்கள் ஆணியடிக்கப்பட்ட காலணிகளைப் போட்டுக் கொண்டு

நடக்கின்றனர்“ என்னும் ஒரு பழமொழி உண்டு. அது உண்மை.

''தேவன் இல்லை என்று மதி கெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான்” தேவன் தமது சொந்த வார்த்தையினால் (கோட்பாட்டினால் அல்ல, தமது வார்த்தையினால்) தம்மை மிகவும் பரிபூரணமாக வெளிப்படுத்துவதை அவன் கண்ட பிறகு, அதைக் குறித்து கேலி செய்தால், அவன் ஒரு முட்டாள்.

ஏனெனில் தேவன் வார்த்தையாயிருக்கிறார், அவர் தம்மை அவர்களுக்கு தெளிவாக வெளிப்படுத்திக் கொடுத்திருக் கிறார்.

அதை ஏற்றுக் கொள்ளாதவன் “மதிகெட்டவன்” என்று வேதம் உரைக்கிறது.

அந்த இடத்தில் அவன் நிற்கும்போது அவனுடைய கதி என்னவாயிருக்கும்?

தேவ பக்தியில்லாத அந்த மனிதனுக்கு அந்த நாள் பயங்கரமாயிருக்கும்.

செய்தி: **62-09-09E அவருடைய சமுகத்தில்**

~~~~~

❸

# தேவனுக்குப் பேரன்களும், பேத்திகளும் இல்லை

264. அதுவேதான் இன்றைக்கும் சம்பவிக்கிறது. நான் கொடூரமாக பேசவிரும்பவில்லை. ஆனால் நான் கூறுவது சரியே. இன்றைக்கும் அதே விதமாகத்தான் இருக்கின்றது. அவர்கள் வேறு வழியைப் பின்பற்றி அதிக சிக்கலை உண்டாக்கிக் கொண்டனர். 'தேவனுக்குப் பேரன்களும், பேத்திகளும் இல்லை' என்று ஒரு பழமொழி உண்டு. அது உங்களுக்குத் தெரியுமா? தேவனுக்கு மகன்களும் மகள்களும் தான் உள்ளனர்.
~~~~~

ஆனால் பேரப்பிள்ளைகள் கிடையாது. ஒவ்வொருவரும் அதே கிரயத்தைச் செலுத்தி நம் முன்னோர் பின்பற்றின அதே வழியில்தான் தேவனையடைய முடியும்.

செய்தி: **63-03-17M தேவன் எளிமையில் மறைந்திருந்து அதன்பின் அவ்விதமே தம்மை வெளிப்படுத்துதல்**

~ ~ ~ ~ ~

❹

# கறுப்பு நிறமுள்ள பசு, பச்சைப் புல்லைத் தின்று, வெள்ளைப் பாலை ஈந்து, அதனின்று மஞ்சள் வெண்ணெய் கிடைப்பது எப்படி?

63. அநேக காரியங்கள் எனக்குப் புரியாமலேயே இருக்கின்றன.

இங்கு உட்கார்ந்திருக்கும் வாலிபர் நான் உண்ணும் ஆகாரத்தையே உண்ணு

கிறார். ஆனால் அவருக்கு மாத்திரம் தலை மயிர் வளர்ந்திருப்பது எப்படியென்று எனக்குப் புரிவதில்லை.

ஆனால் நானோ வழுக்கையாயிருக் கிறேன்.

சுண்ணாம்புச் சத்து மயிர் வளரச் செய்கிறது என்கின்றனர். ஆனால் என் நகங்களை நான் அடிக்கடி வெட்டவேண்டி யதாயிருக்கிறது. ஆனால் வெட்டுவதற்கு மயிரில்லை.

இதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. அந்தப் பழமொழியைப் போல... நான்.

64. இதன் முக்கியத் தன்மையின் நிலையினின்று மாற்றிப் பேசுவதாக நீங்கள் எண்ண வேண்டாம். நான் இன்னும் இந்த முத்திரைக்கு (ஐந்தாவது - தமிழாக்கி யோன்) வரவில்லை. ஆனாலும், இதுவும் முக்கியமானதுதான்.

65. கறுப்பு நிறமுள்ள பசு, பச்சைப் புல்லைத் தின்று, வெள்ளைப் பாலை ஈந்து, அதனின்று மஞ்சள் வெண்ணெய் கிடைப் பது எப்படி? என்னும் ஒரு பழமொழி உண்டு.

இதை என்னால் நிச்சயமாக விவரிக்க முடியாது. பாருங்கள்? ஒன்று மற்றொன்றி லிருந்து உண்டாகிறது. இதன் காரணம் என்னவென்று யார் சொல்ல முடியும்?

66. ஒரே இனத்தைச் சேர்ந்த லீலிச் செடிகளில் ஒன்றில் சிவப்பு நிறமுள்ள பூக்களும், மற்றொன்றில் மஞ்சள் நிறம் கொண்ட பூக்களும், வேறொன்றில் நீல நிறமுள்ள பூக்களும் உண்டாகும் காரணத்தை யார் விவரிக்க முடியும்?

அது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரே சூரிய வெளிச்சம்தான் அவை களின் மேல் படுகின்றது. ஆனால் வெவ் வேறு நிறங்கள் எங்கிருந்து வந்தன?

பாருங்கள்? - அதை என்னால் விவரிக்க முடியாது. ஆனால் அந்த உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

67. இவ்வுலகம் எப்படி கோளப்பாதை யில், கிரகத்தின் சுற்றுப் பாதையில் எப்படி நின்று கொண்டிருக்கின்றது என்பதை ஏதாவதொரு கீர்த்தி பெற்ற வேத சாஸ்திரி விவரிக்க விரும்புகிறேன்.

ஒரு பந்தை நீங்கள் ஆகாயத்தில் எறிந்து, அது ஆகாயத்திலேயே இன்னொரு முறை அந்த பாதையிலேயே சுற்றச் செய்ய உங்களால் கூடுமா? அது உங்களால் முடியாத காரியம்.

ஆயினும் பூமி சுற்றுதல் பிழையின்றி சரியான விதத்தில் அமைந்திருப்பதால், இருபது வருடங்கள் கழித்து சூரிய கிரகணம் எந்த நிமிடத்தில் உண்டாகு மென்று சரியாக நாம் கூறலாம்.

அவைகளுக்கு கடிகாரமோ வேறெந்த இயந்திரமோ இல்லை.

எவ்வித பிழையுமின்றி சரியாக சுற்றிக் கொண்டே இருக்கின்றன. 'வட்ட அமைப் பில் சுற்றுவதை சற்று நேராக ஆக்கினால் என்ன? என்று நீங்கள் நினைக்கலாம். ஆம், அவ்விதம் செய்ய முயன்றால், நீங்கள் மூடர்களாவீர்கள். பாருங்கள்?

68. ஆகவே, ஞானத்தினால் எதையும் புரிந்துகொள்ள முயலவேண்டாம்.

அவர் கூறுவதை அப்படியே விசுவாசி யுங்கள்.

நீங்கள் எளிமையுள்ளவர்களாகும் போது அதைக்கண்டு கொள்வீர்கள்.

அவர் எளிமையுள்ளவராய் இருப்பதற் காக, அவர் தம்மை எளிமையுள்ளவராக செய்து கொண்டதற்காக அவருக்கு நன்றி கூறுகிறேன்.

செய்தி: **63-03-22 ஐந்தாம் முத்திரை**

~~~~~
~~~~~

# ❺

# உன் சகாக்கள் யாரென்று சொல். அப்பொழுது நீ யாரென்று கூறிவிடுவேன்

11. இந்த அருமை சகோதரனும் அவர் மனைவியும் என் நெருங்கிய நண்பர்கள். அந்த பத்திரிகையை அநேகர் பார்த்திருப் பீர்கள். தேவனால் அனுப்பப்பட்ட அந்த சகோதரன் எவ்வாறு தன் மனைவியை அனுமதித்தார்.

யாரோ ஒருவர் அந்த அம்மாள் ஜாக்குலின் கென்னடியைப் போன்று (முன்னாள் அமெரிக்க குடியரசுத் தலைவர் கென்னடியின் மனைவி - தமிழாக்கி யோன்) இருப்பதாகக் கூறினாராம். அவர்கள் உடனே தன் தலைமயிரை

அலங்காரமாகக் கத்தரித்துக் கொண்டு விட்டார்கள்.

அது என்ன? அத்தகைய மக்களுடன் அவர்கள் எல்லா சமயங்களிலும் தொடர்பு கொண்டு முடிவில்... ஒரு நல்ல மனிதன் ஒரு கெட்ட ஸ்திரீயை விவாகம் செய்தால் அவள் நல்லவளாக மாறலாம். அல்லது அந்த மனிதன் கெட்டவனாக மாறக்கூடும்.

''உன் சகாக்கள் யாரென்று சொல். அப்பொழுது நீ யாரென்று கூறிவிடுவேன்“ என்னும் ஒரு பழமொழி உண்டு. பாருங்கள்?

”ஒரே வித சிறகு கொண்ட பறவைகள் ஒன்றாகவே கூடியிருக்கும். அத்தகையான பளபளப்பான காரியங்களிலிருந்து விலகி யிருங்கள்.

<u>செய்தி</u>: **63-11-10E உங்களிலிருக்கிறவர்**

~~~~~
~~~~~

# ❻

# பெண் வாத்தில் கிடைக்கும் சமையற் குழம்பு தான் ஆண் வாத்திலும் கிடைக்கும்

48. இந்தக் கன்மலையை கற்பனை செய்து வரைந்த அநேக ஓவியங்களை நான் கண்டிருக்கிறேன். அவைகளில் ஒன்று கண்டிக்க உகந்தது. அந்த ஓவியத்தில், ஒரு மலையின் மேல் ஒரு சிறு கற்பாறை வரையப்பட்டிருந்தது. மோசே அதை அடித்த பின்பு, அதிலிருந்து தண்ணீர் சொட்டு சொட்டாய் விழுந்து, இஸ்ரவேல் ஜனங்கள் தேநீர் கோப்பையினால் தண்ணீ ரைப் பிடிப்பது போல் வரையப்பட் டிருந்தது. அது யாரோ ஒரு ஓவியனின் கற்பனை.

ஆனால் இந்த கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீர் இருபது லட்சம்

ஜனங்கள் மாத்திரமல்ல, காளைகள், ஒட்டகங்கள் இவைகளின் தாகத்தையும் தீர்த்தது. அது கன்மலையிலிருந்து புறப்பட்டு வந்த வெள்ளப் பெருக்கு.

49. இன்றைக்கு அவர்கள் பரிசுத்த ஆவியாகிய கிறிஸ்துவை அப்படித் தான் சித்தரிக்கின்றனர், "அது துளி துளியாய் விழும் ஒன்று" என்பதாக. பாருங்கள், தேவன் இருக்கிறார் என்று விசுவாசிக்க போதுமான அளவு. அது அப்படியில்லை.

அது திரளான தண்ணீர்! தாவீது, "என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்றான். அது பரிசுத்த ஆவி பெருக்கெடுத்து வேகமாய் பாய்தல்.

ஜனங்கள் அதைக் கண்டு பயப்படு கின்றனர். சிலர், "நான் சற்று ஆழமாகச் சென்றால், இதை அதை செய்துவிடுவேன் என்று பயப்படுகிறேன். சற்று அதிக தூரம் இதில் சென்றவர்களை உங்களுக்கு நான் காண்பிக்க முடியும்" என்கின்றனர். ஆனால்

போதிய அளவு தூரம் செல்லாதவர்களை நீங்கள் சுட்டிக் காண்பிப்பதில்லையே! அப்படி போதிய அளவு தூரம் செல்லாத வர்களைக் குறித்து என்ன சொல்கிறீர்கள்.

50. மாம்சீகமான செயல்களில் ஈடுபட்டு, தவறான பாதையில் வழிவிலகிச் சென்ற சிலர் உள்ளனர். தேவன் அல்ல, மனிதர் தான் அவ்விதம் செய்தனர். ஏனெனில் அவர்களை வழி நடத்த சரியான தலைவன் அவர்களுக்கு இல்லாததனால் தான், அதன் விளைவாக அவர்கள் வழிதவறி, மூட அபிமானத்தில் (fanaticism) சென்றுவிட்டனர். உடனே முழு உலகமும் - பிசாசு - அவர்களைச் சுட்டிக் காட்டி, “பார்த்தீர்களா? பார்த்தீர்களா?” என்கிறது.

ஆனால் இந்த பாதையில் இன்னும் துவங்காத கோடிக் கணக்கானவர்களை இன்று காலையில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்களைக்

குறித்தென்ன? அவர்களின் நிலையைப் பாருங்கள். அவர்கள், “பெந்தெகொஸ்தே யினர் ஒழுக்கமற்றவர்கள், அநாகரீகமுள்ள வர்கள்” என்றெல்லாம் குறை கூறுகின் றனர். ஆனால் ஹக்ம்மனை நாம் எடுத்துக் கொள்வோம். உலகிலேயே அதிகம் படித்தவர்களில் அவர் ஒருவர். அவர் அறுபது லட்சம் ஆண்களையும், பெண் களையும், குழந்தைகளையும் கொன்று போட்டாரே! அப்படிப்பட்ட ஒருவரை நீங்கள் சுட்டிக் காண்பிப்பதில்லையே!

51. ஆனால் படிப்பறியாத, வேதாகமத் திலுள்ள பெயர்களையும் கூட சரியாகப் படிக்கத் தெரியாத ஒருவர், ஏதாவதொரு தவறைச் செய்துவிட்டால் அல்லது ஏதாவதொன்றை தவறாகக் கூறிவிட்டால், உடனே செய்தித்தாள்கள், “அவர்கள் நம்பத் தகாதவர்கள்” என்று வெளியிடு கின்றன.

அவர்கள் நம்பத் தகாதவர்கள் என்றால், கல்வியறிவு பெற்று, நுண்ணறிவு படைத்தவர்கள் குறித்தென்ன? அடால்ஃப் ஹிட்லரைப் பாருங்கள். இன்றுள்ள உலகில் அறிவில் சிறந்தவர்களைப் பாருங்கள். அவர்கள் மட்டும் என்ன? "பெண் வாத்தில் கிடைக்கும் சமையற் குழம்பு தான் ஆண் வாத்திலும் கிடைக்கும்" என்னும் ஒரு பழமொழி உண்டு.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன வெனில், பரிசுத்த ஆவியின் உதவியைக் கொண்டு நன்மை, தீமையைப் பகுத் தறிந்து, நன்மையை எடுத்துக் கொள்ளுத லாகும்.

செய்தி: **61-07-23M என்றென்றும் பிரசன்னமாயுள்ள கன்மலையின் தண்ணீர்**

~ ~ ~ ~ ~